| | | | |
|---|---|---|---|
| 1 | நகரமைப்பு பிரிவு | நகரமைப்பு அலுவலர் (நிலை-II) / உதவி பொறியாளர் (திட்டம்) | 1 |
| 2 | | நகரமைப்பு ஆய்வாளர் | 1 |
| | | **மொத்தம்** | **2** |
| 1 | பொது சுகாதாரப் பிரிவு | துப்புரவு அலுவலர் | 1 |
| 2 | | துப்புரவு ஆய்வாளர் | 2 |
| 3 | | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 5 |
| 4 | | களப்பணி உதவியாளர் | 1 |
| | | **மொத்தம்** | **9** |
| | | **நிகர மொத்தம்** | **43** |

மேலும் நகராட்சிகளில் ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து வரையறைகள் நிர்ணயம் செய்தது தொடர்பாக கீழ்க்காணும் வழிகாட்டுதல்கள்/ தெளிவுரைகள் வழங்கி அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

1. நகராட்சிகளில் நிரந்தர பணியிலுள்ள பொதுப்பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பணியின் கீழ் பணிபுரியும் ஓட்டுநர்கள், பொறியியல் பணியின்கீழ், குடிநீர் பிரிவு மற்றும் தெருவிளக்குப் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்கள், இரவுக் காவலர்கள், சங்கிலியர்கள் முதலான பணியிடங்கள் மற்றும் பொது சுகாதாரப்பிரிவின் கீழ் பணிபுரியும் தூய்மைப் பணியாளர் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் ஓய்வு பெற்ற பின்னர் அப்பணியிடங்கள் அரசுக்கு ஒப்புவிப்பு செய்யப்பட்டதாக கருதப்படும். இப்பணியிடங்களில் புதிதாக நியமனங்கள் செய்யக்கூடாது. அதன் பின்னர் அப்பணிகளை வெளிமுகமை (Service Proposed for outsoucing) மேற்கொள்ளலாம்.
2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களைத் தவிர வேறு பணியிடங்கள் ஏதேனும் இருப்பின், அப்பணியிடங்களில் முறையான ஊதிய விகிதங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் அவர்கள் ஓய்வு பெறும் வரை பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள். அதன் பின்னர் அப்பணியிடங்கள் காலாவதியாகிவிடும்.
3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பணியிங்களிலும் தற்போது காலமுறை ஊதியத்தில் (Time Scale) பணிபுரிந்து வரும் அனைத்து பணியாளர்களுக்கும் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் உள்பட உரிய பணிப்பலன்கள் (Service Benefits)நடைமுறையில் உள்ள விதிகள்/ அரசாணைகளின்படி தொடரும்.

மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.205/2023/சி1)

<u>அலுவலக குறிப்பு</u> :
அனுமதிக்கலாம்.